இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இல: QB/3529 —விலை சதம் 10.

# விடுதலை

'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்; என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'

என்றோ ஒரு நாள் நமது இனம் தலை தூக்கி நிற்கும், தன் மானத்துடன் வாழும், என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான். சரி எல்லாம் முடிந்து விட்டது, இனி நம்மால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை, ஏதோ நடக்கிறது நடக்கட்டும் என்று கையைக் கட்டிக் கொண்டிருப்பதை வெறுப்பவன் நான். கயவன் ஒருவன் கையில் சிக்கிய அபலையான தமிழ்ப் பெண் ஒருத்தி, இனித் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது, ஏதோ அவன் செய்கிறதைச் செய்யட்டும் என்று தனது மானத்தை விட்டுக் கொடுக்க மாட்டாள். உயிரைத் துறப்பாளே யன்றி, கற்பை இழக்க மாட்டாள். அதே நிலை தான் இலங்கையில் தமிழினத்தின் நிலையும்.

—காவலூர் நவம்

முரசு 5 | திருவள்ளுவர் ஆண்டு 2002 தை 2 (15—1—71) வெள்ளிக்கிழமை | முழக்கம் 75

# தமிழ் இனத்திற்குப் பிரதமரின் சவால்!

## சிங்கள சோஷலிசத் திரை கிழிகிறது !!

**1966ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி தமிழ் மொழிச் சட்ட உபயோக விதிகளுக்கு எதிராக, இன்றைய ஆளுங்கட்சியினர் சிங்கள மக்களைத் தூண்டியதனால் எழுந்த கலவரத்தில் ஒரு பௌத்தபிக்கு கொல்லப்பட்டது தெரிந்ததே!**

சிங்கள சோஷலிஸ்ற் அரசாங்கம் கொழும்பில் அந் நினைவு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடியுள்ளது. ஒரு நினைவுக்கல் திறந்து வைக்கப்பட்டது.

நினைவுக்கல்லைத்திறந்துவைத்துப் பேசிய சிங்கள சோஷலிச பிரதமர் சிறிமா பண்டாரநாயகா குறிப்பிட்டதாவது:—

''நமது நாட்டையும், மக்களையும், மதத்தையும், மொழியையும் காப்பாற்ற நாம், எமது உயிரைக் கூடத் தியாகம் செய்ய வேண்டும். நாம் எதிர்க்கட்சியில் இருந்த பொழுது தேசிய மொழிக்காக உயிரைத்துறந்த பிக்குவிற்கு நிரந்தரமான நினைவுக்கல் அமைப்போம் என்று செய்த சபதத்தினை, ஆட்சிப் பீடம் ஏறிய ஆறு மாதங்களுக்குள்ளேயே நிறைவேற்றியதையிட்டு மகிழ்கிறோம். மகா சங்கத்தினர் (பௌத்த பிக்குகள்) இவ்வித தியாகம் செய்ததற்குச் சிங்களவர்சரித்திரத்தில் ஏராளமான அத்தாட்சிஉண்டு.

அரசாங்கம் தனது பெரும்பான்மை பலத்தைக் கொண்டு மக்கள் விரும்பாத சட்டங்களை ஆக்கக்கூடாது என்பதற்கு நல்ல படிப்பினை இந்நிகழ்ச்சி.''

இப் பேச்சிலிருந்து அவர் சிங்களவருக்குத்தான் பிரதமரே தவிர, தமிழர்க்கல்ல' என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?

நாட்டு மொழி, இனம், மதம் என ஒருமையிலேயே பேசியிருக்கிறார். எனவே அந்த ஒரு மொழி சிங்களம், இனம் சிங்கள இனம், மதம் பௌத்தம் என்பது பெறப்படுகிறதல்லவா?

பிரதமர் கணிப்பில் ''மக்கள்'' என்பது சிங்கள மக்கள்தான். இல்லையானால் சிங்கள மக்களிடையே ஒரு சிலர் இன்றைய அரசினரின் தூண்டுதலால் தமிழ் மொழி உபயோகவிதிகளை எதிர்க்க - அவ்வெதிர்ப்புக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று பிரதமர் கூறுவாரா? ஆனால் அதே நேரத்தில் முழுத்தமிழினமும் சில சிங்களவர்களும் கூட சேர்ந்து எதிர்க்க சிங்களம் மட்டும் சட்டத்தை விடாப் பிடியாக அமுல் நடத்த முன்னிற்கிறார் பிரதமர்! எனவே அவர் கணிப்பில் ''மக்கள்'' என்போர் சிங்களவர்தானே?

இந்த விழாவை கலாச்சார அமைச்சு முன்னின்று நடத்தி ஒரு ''மலர்'' கூட வெளியிட்டிருக்கிறது. அரசாங்கப் பணம் இந்த வெறி விழாவிற்கு செலவழிக்கப் பட்டுள்ளது.

தமிழ் மொழிக்கு சில சலுகைகள் கொடுப்பதை ஆட்சேபித்து வெறியாட்டம் ஆடுவதை நினைவு படுத்தி விழா வெடுப்பதுதான் சிங்கள சோஷலிச அரசாங்கத்தின் கலாச்சாரப்பணி! இவ்விதம் பொதுப்பணம் துஷ்பிரயோகிக்கப்படுகிறது. இப்பொதுப் பணத்தைத் தமிழர்களும் தானே கொடுக்கின்றனர்?

ஆகையினால் பிரதமரின் பேச்சும் செயலும் ஈழத்தமிழருக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. தமிழினத்தின் பதிலென்ன?

## மஸ்கெலிய நீர்மின் திட்டமும் ஒரு பொறி!

**இம்மாசம் 16ந் திகதி மகா தேசாதிபதியும், நீர்ப்பாசன அமைச்சரும் (கோப்பாய் பா. உ. ஆல் முன் மைத்துனன் என்று உறவு கொண்டாடப் பட்டவர்) யாழ் நகர் விஜயம் செய்கிறார்கள்-மஸ்கெலியா நீர் மின் திட்டத்தில் யாழ்ப்பாணம் இணைக்கப்பட்டதைக் ''கொண்டாட.''**

முன்னர் ஒரு முறை தமிழரசாரின் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்திற்குப் பயந்து மகா தேசாதிபதி தனது யாழ் நகர் விஜயத்தை ரத்துச் செய்தவர். அது ஒரு காலம். அந்தப் போராட்டக் காலமெல்லாம் ஓர் அமைச்சர் பதவியுடன் 1965ல் மலை ஏறி விட்டது.

இந்த நீர் மின் திட்டத்திற்கு 100 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாம். இதிலே தான் மர்மம் இருப்பதாகப் படுகின்றது. இவ்வளவு பணத்தையும் தமிழ் மக்களின் நன்மைக்காக கொட்ட எப்படி சிங்கள அரசுக்கு மனம் வந்தது என்பது தற்போது புதிராக இருக்கிறது.

ஒருவேளை இத்திட்டத்தால் தமிழ் மக்களின் குரல் வளையை, தேவைப்படும் போது நெரிக்க முடியுமென்பதற்குச் செய்தார்களோ? சென்ற சத்தியாக்கிரகத்தின் போது யாழ் நகர் மின் விநியோகம் மா நகரசபையின் கட்டுப்பாட்டில் இருந்ததால் எவ்வளவு ஒத்தாசைகள் செய்யமுடிந்தது. எதிர் காலத்தில் மின் விநியோக ''சுவிச்'' சிங்கள தேசத்தில் இருக்கும். என்ன தான் செய்ய முடியாது?

அல்லது ஏகாதிபத்திய வாதிகளைப் போல் மிஞ்சியிருக்கும் மின் சக்தியைக் கூடுதல் விலைக்குத் தமிழ் பகுதிகளுக்கு விநியோகம் செய்யலாம்—தூரம் என்ற சாட்டில் பெற்றோல், அரிசி, மா, சீனி போன்ற பொருள்களுக்குக் கூடிய விலை விதித்தது போல.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்றுதான் எமக்குப் படுகிறது.

## ''மலமுனை''யில் பௌத்த தர்மம்!

### மாத்தளை முஸ்லீம் மக்களின் அனுபவம்!!

சென்ற மாதமுடிவில் மாத்தளை நகரில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அதன் மகாநாட்டை நடத்தியது. இதை யொட்டி அந் நகரிலுள்ள இறைச்சிக் கடைகளை மூட வேண்டும் என்று இறைச்சி வியாபாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நத்தார் பண்டிகையை முன்னிட்டு இறைச்சி வியாபாரம் நல்ல நிலையிலிருந்ததால் வியாபாரிகள் இவ்

(4ம் பக்கம் பார்க்க)

## அரசியல் அங்காடி

''நவமணி''

### சம சமாஜமும் தமிழரும்

சோஷலிஸம் என்பது புனிதமான ஒரு உன்னத கொள்கை. அறிவையும், உள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லது. அதே போலத்தான் தங்க மயமான அழகிய பொன்மான் ஒன்றும் ஒரு பெண்ணின் உள்ளத்தையும், அறிவையும் கொள்ளை கொள்ளத்தக்க மாய வல்லமை பொருந்தியது. இராமலஷ்மணர்களின் வில்லாண்மை, சீதையைக் காவல் செய்யும் வரையில் அவளைக் கடத்திச் செல்ல முடியாதென்பதை உணர்ந்த இராவணன் பொன்மானை அனுப்பி ஏமாற்றிச் சீதையைக் கவர்ந்து சென்றான். இது அரசர்கள் கையாளும் தந்திரோபாயங்களில் ஒன்று. பகைவர்களை வெல்லுவதற்கு எந்தத் தந்திரத்தையும் உபயோகிக்கலாம். கௌடில்யன், சுக்கிரன், மனு முதலிய இராஜதந்திரிகள் வகுத்த அர்த்த சாஸ்திரங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாணக்கியங்களுள் இதுவும் ஒன்று. ஏமாற்றப் படுவதற்கு இராமரும் இலக்ஷ்மணனும் ஆயத்தமாக இருந்தால், ஏமாற்றித் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டு போன இராவணனை எப்படிக் குறை கூற முடியும்?

ஆனால் விந்தை என்னவென்றால், அன்று இராவணன் அனுப்பிய மாயமான் செய்த வேலையை இன்று இலங்கையிலே தமிழர் மத்தியில் சோஷலிஸம் செய்து கொண்டிருக்கிறது. இந்த அழகான பிராணியைக்கண்டு மயங்கித் தமிழர் சிலர் பின்னாலே ஓடுகிறார்கள். ஒரு சிலர் சோஷலிஸம் பேசிப் பிழைப்புத் தேடிக் கொள்ளுகிறார்கள். தமிழ் காங்கிரஸ் எம்.பிக்கள் சோஷலிஸம் பேசி அரசாங்கக் கூட்டணிக் கட்சிக்கு அடிவருடி மண்டியிட்டுப் பிழைக்கிறார்கள். தமிழரின் ஒரே பத்திரிகை என்று பெருமையடித்து கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரி ஒன்று சோஷலிஸம் பேசி கூட்டணிக்கட்சிக்கு சஹஸ்ர நாமம் பாடுகிறது. இவையெல்லாம் நமக்கு வியப்பைத் தரவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சி எம்.பீக்களும் சோஷலிசஸம் பேசி, அரசாங்கக் கூட்டணியினருக்குப் பின்னாலே திரிகிறார்களே அது தான் விந்தையிலும் விந்தை. அரசாங்கத்தின் ''சோஷலிஸம்'' என்னும் மாயமானுக்கு Respeetability ''மதிப்பு''தேடிக்கொடுக்கும் பிரசார முன்னணியாக, ரஷ்யத்தூதுவர்களென்றும், கிழக்கு ஜேர்மன் தூதுவர்கள் என்றும், அராபியத் தூதுவர் என்றும் வந்து போகிறார்கள். அவர்களுக்குப் பின்னாலே திரிந்து ஆலவட்டம் பிடிக்கிறார்களே, அதுதான் விந்தையிலும் விந்தை. கேட்டால், ''நாங்களும் சோஷலிஸ்ட்டுக்கள்தான், எங்கள் தமிழரசுக் கட்சி அமைப்புப் புத்தகத்திலே, சோஷலிஸம் தான் எங்கள் கொள்கை என்று எழுதியிருக்கிறது'' என்கிறார்கள். பாவம், வந்திருப்பது சோஷலிஸம் என்னும் மாய மான் வேஷத்தில் மாரீசன் என்னும் சிங்கள ஏகாதிபத்தியம் என்பதை உணரச் சக்தி இல்லையா? ஏன் இல்லை? அவர்களுக்கு நன்றாகத் தெரியும். யாருக்குத் தெரிந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி, தமிழரசுத்தலைவர் திரு. செல்வநாயகத்துக்குத் தெரியும். ஆனால், அவர் தனித்துப்போனார். அதனாற்றானே 1965 தொடக்கம்1970 ஈறாக ஐந்து வருடகாலம் பாராளுமன்றத்திலேஒரு சொல்லுக் கூடப்பேசாதவர், இப்பொழுது அடிக்கடிஎழுந்து பேசி தனது சொந்தக் கருத்தைத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. ஏனைய பன்னிரண்டு உறுப்பினர்களுக்கும் பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் தமிழரசுக் கட்சியின் தற்காலிக உபயோகம் தீர்ந்துவிட்டது. இனி அடுத்த பொதுத் தேர்தல் வரும் வரையில் (வந்தால்) அது தேவைப்படாது. இந்தக்கட்சி அமைப்பைத்தான் திரு. செல்வநாயகம் விரும்பினார், விரும்புகிறார். எனவே 'False pretences' என்னும்ஏமாற்று வித்தையைக் கடைப் பிடித்துப் பதவி சம்பாதித்துக் கொண்டவர்கள் தாம் போட்ட வேஷத்தை நடித்துத் தானே ஆகவேண்டும்.

சிங்கள சோஷலிஸத்தின் சுயரூபத்தை இதுவரையில் உணராத தமிழர்கள் இனியாவது உணர்ந்து தமிழ்மக்களை அடகு வைக்க வேண்டாம். முப்பத்தைந்து வருடங்களாகச் சோஷலிஸம் பேசி, சிங்களவர்கள் வேறு தமிழர்கள் வேறு என்று பாகு பாடு காட்டித் தாங்கள் சிந்திப்பவர்களல்ல, இரண்டு இனங்களும் சம உரிமைகளை அனுபவிப்பதே தங்கள் சித்தாந்தம், என்றெல்லாம் சொல்லி சமதர்மம் பேசிக்கொண்டு வந்தசமசமாஜக்கட்சி, இன்று முகமூடி கிழிக்கப்பட்டு சுயரூபத்தைக் காட்டி நிற்கின்றது. முகமூடியைக் கிழித்து சுயரூபத்தைக் காட்டியவர் வேறு யாருமல்ல, போக்குவரத்து அமைச்சர் கௌரவ லெஸ்லி குணவர்தன அவர்களேதான். பன்னெடுங்காலம் லங்கா சம சமாஜக்கட்சி

[4ம் பக்கம் பார்க்கவும்]

ஈழத் தமிழர் விடுதலை முழக்கம்

# புத்தாண்டுச் செய்தியில் பிரதமரின் இனபேதம்!

1966ம் ஆண்டிலிருந்து புத்தாண்டு தினம் அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைநாளாயிருந்துவந்தது. ஆனால் கூட்டணி அரசாங்கம் அந்நாளை வர்த்தக விடுமுறை நாளாக ஆக்காது, பண்டாரநாயக்கா நினைவு நாளை விடுமுறையாக ஆக்கியுள்ளது.

இருந்தும் நாட்டின் பிரதமர் என்ற முறையில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அம்மையார் நாட்டு மக்களுக்கு ஒருபுத்தாண்டு செய்தி விடுத்திருக்கிறார்—எல்லா மக்களையும் வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி மாடாக உழைக்கும்படி.

ஆனால் அதே நேரத்தில் தமது வகுப்பு வாதத்தையும் தான் சிங்கள பௌத்த மக்களின் பிரதமர் மட்டுந்தான் என்ற ரீதியில் பின்வருமாறு பேசியுள்ளார்.

''பௌத்த சமயம் போதிக்கும் உயர்ந்த தர்மத்தை அடித்தளமாக கொண்ட ஒரு மகத்தான கலாசாரத்திற்கு நாம் வாரிசுகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். மனித தன்மையையும் பகுத்தறிவையும் போற்றும் இந்த பௌத்த பாரம்பரியங்களை நாம் பெற்றிருப்பதையிட்டு, பெருமை அடைகிறோம். இந்த உன்னத சமயத்தை அதன் புனிதம் குன்றாத முறையில் பாதுகாத்து வருவதற்கு நம்மால் இயன்ற உதவியும் ஒத்தாசையும் அளிப்பதில் பெருமை அடைகிறோம். உலக நாகரீகத்திற்கு நாம் வழங்கும் உதவிகளில் இது பிரதானமானது.''

இஸ்லாமிய, சிங்களக்கிறிஸ்தவ நாகரீகங்களைப் பிரதமர் புறக்கணித்திருப்பது எமக்குப் புறம்பானவை. ஆனால், பிரதமரின் இனத்தை இந்நாட்டில் நிறுவிய விஜயனின் வருகைக்கு முன் இந்த நாட்டிலே பரவி இருந்த திராவிட நாகரிகம்பற்றி ஏன் மறந்தார்? விஜயன் இந்நாட்டில் அனுமதியின்றி நுழைவதற்குமுன் வட பகுதியில் வாழ்ந்த திராவிட மக்களின் அரச குமரர் இருவர்க்கிடையில்ஒருஇரத்தினக் கற்கள் பதித்த சிம்மாசனம் பற்றி மூள இருந்த சண்டையை தீர்க்கப் புத்தர் வந்தார் என்று சிங்கள மகாவம்சம் கூறுகிறதே! அவ்வளவு உயர்ந்த நாகரீகம் படைத்த திராவிட மக்களையும் அவர் தம் நாகரீகத்தையும் ஏன் மறக்கவும் மறைக்கவும் பார்க்கிறார் பிரதமர்?

இந்த மறதிக்கு ஒரே ஒரு விளக்கம்தான் கொடுக்க முடியும். அதுதான் இலங்கைப் பிரதமராகப் பெயரளவில் இருந்தாலும், இத்தீவு இரு தனியான இனங்கள் வாழும் நிலப்பரப்பென்பதையும் தமிழ் மக்கள் வாழும் ஈழத்திற்கு தான் உண்மையில் பிரதமரல்ல என்பதையும் அவரே ஒப்புக் கொள்கிறார் என்பதாகும்.

## சொன்னாலும் வெட்கமடா!

தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளை நிதிக்கும் அக்கிளையின் ஆதரவுடன் The peoples will என்ற பெயருடன் வெளியாகும் மாதாந்த ஆங்கில ஏட்டின் வளர்ச்சிக்கும் உதவும் முகமாக கொழும்பில் சுகததாசா விளையாட்டு அரங்கில் ஆங்கில இசை ''பொப்'' நிகழ்ச்சி ஒன்று சென்ற நவம்பர்மாசம் 28ந் திகதி நடத்தப்பட்டுள்ளது. நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள் இந்த உண்மையைத் திரைமறைவில் வைத்திருந்த போதிலும், விடயம் கொழும்புவாழ் தமிழ் மக்கள் மத்தியில் வெளியாகிவிட்டது.

தமிழ்மக்கள் இச்செயலை விரும்பாத காரணத்தால் போலும் மொத்தம் 3000/- நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகப் பேசப்படுகின்றது.

## இரு மொழிப் பல்கலைக்கழகம் அன்றுவேண்டும் - இன்றுவேண்டாம்!

### மீண்டும் தனது கக்கலை உண்கிறது - சுதந்திரன் !!

தமிழ் மக்களின் பல்கலைக் கழக விஷயம் மீண்டுய் தலை தூக்கியுள்ளது — புதிய உருவில். வடக்கிலும், கிழக்கிலும் இரு பல்கலைக் கழகங்கள் அமைக்கப் போவதாக கூட்டணி அரசாங்கம் அறிவித்து ஏதோ நடவடிக்கை எடுக்கப் படுகிறதாக செய்திகள் கூறுகின்றன.

இது விஷயம் பற்றிய முழு விபரமும் தெரியமுன் எமது கருத்தைத் தெரிவிக்க விரும்ப வில்லை. ஆனால் சுதந்திரனது ஆஷாட பூதித்தனத்தை வெளிப்படுத்தாமல் இருந்தால் எமது கடமையிலிருந்து தவறியதாகிவிடும்.

20. 12. 70ம் நாள் சுதந்திரனில் '' இரு மொழி பல்கலைக் கழகம் தமிழினத்துக்குப் பேராபத்து''என்ற தலைப்பில் தனது கருத்தையும், கொழும்புத் தமிழரசுப் பிரமுகர் ஒருவரின் கருத்தும் வெளியிட்டிருக்கிறது.

இரு மொழிப் பல்கலைக் கழகக்கொள்கையை யு.என். பீ. காலத்தில் ஏற்று அவ்வித பல்கலைக் கழகத்தை திருகோணமலையில் அமைக்கும்படி கோரிக்கை விடுத்த கட்சியும், அதன் பிரசார ஏடும் இன்று ஒரு மொழிப் பல்கலைக் கழகம் பற்றிப் பேசுவது கேலிக்கூத்து! திருகோணமலையிலா, யாழ்ப்பாணத்திலா பல்கலைக் கழகம் அமைப்பதென்பதைப் பற்றிச் சிபாரிசு செய்ய முன்னைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உப குழுவில் இருவர் திருகோணமலையைச் சிபார்சு செய்தனர் — வெவ்வேறு காரணத்துக்காக. தமிழரசுக் கட்சியின் சிபாரிசில் தேசிய உயர் கல்விச் சபைக்கு நியமிக்கப்பட்ட தமிழ் உறுப்பினர் என்ன காரணத்துக்காக திருகோணமலையை சிபார்சு செய்தாரோ நாமறிய முடியவில்லை. ஆனால் சபைத்தலைவர் திருகோணமலையைச் சிபாரிசு செய்தாராம். அது பொலன்னறுவை, மதவாச்சி அனுராதபுரம் போன்ற சிங்களப் பகுதிகளுக்கு அண்மையில் உள்ளதால் இப்பகுதிச் சிங்கள மாணவருக்குக் கூடிய வசதியாயிருக்குமென்று தமது சிபாரிசில் குறிப்பிட்டாராம்.

ஏற்கனவே சிங்களக் குடியேற்ற நெருக்கடிக்கு ஆளாகியுள்ள திருகோணமலையில் இருமொழிப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்குக் கோரிக்கை விடுத்து விட்டு இன்று இரு மொழிப் பல்கலைக்கழகக் கொள்கையைக் கண்டிக்கிறது சுதந்திரன் — தனது கக்கலை மீண்டும் உண்ணும் நாய் போல!

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வதில் பயனுண்டானால் சுதந்திரனின் இச் செயலை வரவேற்கிறோம்!

## 'பூலோக சொர்க்கத்தி'லிருந்து 'பாலைவனத்தி'ற்கு ஓட இளைஞர் முயற்சி !

## ருஷியாவில் 'சோஷலிசத்தை' இனப்பற்று மீறிவிட்டது!!

சோவியத் ருஷியாவில் வாழும் இரு யூத இளைஞர்கள் யூதர்களின் நாடான இஸ்ரேலிற்குச் செல்வதற்காக ஒரு ருஷிய விமானத்தை வேறு சிலருடன் சேர்ந்து திசை திருப்ப முயன்றனர். இக் குற்றத்திற்காக இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டிருந்தது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இவ் விளைஞர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனைக் கெதிராக எழுப்பிய கண்டனக் குரலையடுத்து மரண தண்டனை 15 வருட சிறையாகக் குறைக்கப் பட்டுள்ளது.

ஐம்பது வருடங்களாக 'சோஷலிசத்தை' வளர்த்து வரும் சோவியத் நாட்டிலிருந்து இந்த இரு இளைஞர்கள் இஸ்ரேலிற்கு தப்பியோட முயற்சித்தது ஏன்? யூதர்களான இவ்விளைஞர்கள் யூதர்கள் தம்க்கென அமைத்து, சுதந்திரமாக வாழும் இஸ்ரேலிற்குத் தப்பியோட முயற்சித்ததற்குக் காரணம் இனப்பற்று. இன வழி அமைத்த நாடே உண்மையான தாயகம் என்ற எண்ணம்.

ருஷியாவில் இன, மத, மொழி வேறுபாடற்ற சோஷலிச சமுதாயம் வளர்ந்தோங்குவதாகப் பிரசாரம் செய்யப் படுகிறது. வறுமையை ஒழித்து எல்லோரும் வாழ வழிவகுக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. 'பூலோக சொர்க்கம்' சோவியத் ரஷியா என 'கம்ரேடுகள்' கொக்கரித்துத் திரிகின்றனர். ஆயினும் இந்த, 'பூலோக சொர்க்கத்தை' துறந்து விட்டு, போரும் கஷ்டமும் நிறைந்த பாலைவன நாடாம் இஸ்ரேலிற்கு இந்த யூத இளைஞர்கள் ஓட முயற்சித்த காரணமென்ன? நம் நாடு - நம் இனம் என்ற அப்பழுக்கற்ற உணர்ச்சி.

ஆம்; சோஷலிசத்தை மீறிச் செயற்படுகிறது நம்க்கென ஒரு நாடு என்ற இன எழுச்சியும் — உணர்ச்சியும்!

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கச் சோஷலிசம் தான் ஒரே வழி என, 'கம்ரேடுகள்' பிரசாரம் செய்கின்றனர். ஆனால் அவர்களின் சொர்க்க பூமியிலேயே சோஷலிச 'சுகத்தை' தூக்கியெறிந்து விட்டு பாலைவனத்திற்கு ஓட யூத இளைஞர் இருவர் முயற்சித்திருக்கின்றனர்.

இன உணர்வு சோஷலிசத்தை மிஞ்சி விட்டது. 'கம்ரேடுகளின்' பதில் என்ன?

## சுயாட்சியை ஆதரிக்கும் சமஷ்டி ஏடு!

யு. என். பி உடன் சமஷ்டிக்கட்சி உறவுபூண்டு மாவட்டசபைகூடப் பெறமுடியாது வெறுங்கையுடன் திரும்பிய பின்னர், இனிமேல் சுயாட்சி தான் தமிழினத்திற்கு வழி என்ற மனநிலை ஏற்படத் தொடங்கியது — குறிப்பாக, தமிழர் சுயாட்சிக் கழகம் தோன்றியபின். இந்நிலை கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் வலுவடைந்து வருவதை இலகுவில் காண முடிகிறது. சமஷ்டிதான் எமது இலட்சியம் என்று சமஷ்டிஏடு கூறி, சமஷ்டி மலர்கள் வெளியிட்டாலும், இந் நாட்டில் வாழும் தமிழ் மக்கள் வந்தேறு குடிகளென்றும் அவர்கள் சிங்கள மக்கள் மீது படை எடுத்தவரின் பரம்பரையினர் என்றும் அவர்களுக்கு, உரிமைகள் ஒரு புறமிருக்க, சலுகைகள் கூட வழங்க மறுக்கும் சிங்கள இனத்துடன் இணைந்து ஒரு சமஷ்டி அமைப்பை உருவாக்கமுடியாதென்பதையும், தர்க்கரீதியில் சுயாட்சிதான் ஒரே வழி என்பதையும் சுதந்திரன் ஆசிரியர் உட்பட பல தமிழரசு வாதிகள் ஏற்கும் நிலைக்கு வந்து விட்டார்கள் என்று கூறுவது மிகையாகாது.

இக் கூற்றுக்கு ஆதாரமாக அமைகிறது 20. 12. 70 ல் வெளிவந்த சுதந்திரனின் கட்டுரைகள்: இதோ:

1. ''ஆண்ட பரம்பரை நாம் - மீண்டும் நம் நாட்டை நமதாக்கி நமது அரசு அமைத்து நம் தமிழன்னைக்கு மணிமகுடம் சூட்டிப்பார்த்து மகிழாமல் போவோமா? இதைவிட வேறென்ன நமக்கு வேலை?''

(கோவை - மகேசன்
அரசியல் மடலில்)

2. '' நமக்கு ஒரேவழி அரசியல் விடுதலைக்குப் போராடி நமது பிரதேசத்தில் நமது ஆட்சியை நிறுவி, நமக்கு வேண்டிய பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தி நமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வதுதான் ''
(ஆசிரியரின் எண்ணத்தில்)

## வாசகர் கடிதம் :

ஆசிரியருக்கு,

### 'விடுதலை வாழ்ந்திடும்'

ஆடுவது தொட்டில் ஆட்டுவது தமிழரசு, உறங்குவது தமிழினம், உள்ளுணர்வு இல்லாமல், வேகுவது என் இதயம், வேதனை தாங்காமல்.

கேட்பது முழக்கம், ''விடுதலை'' முரசின் பெரு முழக்கம். களிப்பது என் உள்ளம், கண்டம் பிழைத்ததென்று.

வாசக அன்பர் வாய்ப்பை இழக்காமல் உழைப்பீர் பாங்காக'' விடுதலை '' பரவிடவே! வாங்குவீர், ''விடுதலை'' யைப் பத்துப் பத்தாக, வழங்குவீர் நண்பர்க்கு, முத்துமுத்தாக.

காணுவீர் வாசகரைப் பன்மடங்காக, ஏற்றுவீர் புதுப் பொலிவு, நம் நன்மைக்காக.

''விடுதலை'' வாழ்ந்திடும். புதுவழி பிறந்திடும். தமிழினம் தழைத்திடும், தரணி ஆண்டிடும்.

எஸ். என். பாலசிங்கம்
திருகோணமலை.

ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா,

### ''நமக்கொரு நாடு''

விடுதலையில் தொடர்ந்து வரும் ''நமக்கொரு நாடு'' இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் தட்டி எழுப்பப் போகின்றது. அதன் மூலம் மானமுள்ள தமிழர் மார்பு தட்டி வாழப் போகின்றார்கள். அக் காட்சியை என் கண்களால் காணப் போகின்றேன். அதற்காக 'விடுதலை'க்கும், சுயாட்சிக்கழகத் தலைவருக்கும், எனது அளப்பரிய பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

''தமிழன் என்று சொல்லடா,
தலை நிமிர்ந்து நில்லடா''

ஆ. சிவஞானம்
கரவெட்டி.

## ஆண்ட தமிழ் இனம் மீண்டுமொரு முறை

# வட மாகாணத்திற்கு சிங்கள கல்வி அதிபதி !

## ★★★ கல்லூரிகளில் சிங்களத் திணிப்பிற்கு முன்னேடி நடவடிக்கை !! ★★★

**வட மாகாணத்திற்கு கல்வி அதிபதியாக திரு. டபிள்யு. டீ. சி. மகாதந்தில எனும் சிங்கள அரசாங்க அதிகாரி நியமிக்கப் பட்டிருக்கிறுர்.**

நூற்றுக்கு 99.9 வீதம் தமிழ் மக்கள் வாழும் பகுதி வடமாகாணம். இங்கு கல்வி கற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் அதே போன்று தமிழர்களே! இற்றை நாள் வரை வட - மாகாணத்தில் இவ்வுயர் பதவி வகித்தவர்கள் தமிழர்களே! இப்பொழுது சிங்கள சோஷலிச அரசு முதன் முறையாக ஒரு சிங்களவரை இப்பதவிக்கு நியமித்திருக்கிறது.

திரு. மகாதந்தில அவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் கடமையாற்றுவதற்காக தமிழ் படிப்பதாக ''தினபதி'' இரண்டு பந்திச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

ருஷ்யா மீது படையெடுக்க முன் ஹிட்லர் தனது படை அதிகாரிகளுக்கு ருஷ்ய மொழியைப் பயிற்றுவித்தான். ருஷ்ய மொழியை அறிந்திருப்பது அந்நாட்டை ஆக்கிரமித்து அடிமைப்படுத்தி வைத்திருக்க தேவையானது என்பதை ஹிட்லர் அறிந்திருந்தான்.

மலை நாட்டுத் தோட்டங்களிலே வேலை செய்யும் தமிழ் தொழிலாளரின் உழைப்பை உறிஞ்சி எடுக்க வெள்ளைக்கார தோட்டத்துரைமார் தமிழ் படித்திருக்கின்றனர்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை பரப்ப ஹிட்லர்தன் படை வீரருக்கு ருஷிய மொழியைப் போதித்தான். மலை நாட்டுத் தொழிலாளரின் உழைப்பை உறிஞ்ச- அவர்களைச் சுரண்டிவாழ- தோட்ட நிர்வாகத்தினர் தமிழ் படித்தனர். கலாசார சமூக நல்லுறவுக்காக இவர்கள் இதைச் செய்யவில்லை, செய்ய வேண்டிய தேவையுமில்லை.

எனவே திரு மகாதந்தில தமிழ் கற்கிறுர் என்றுல் அது சிங்கள ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்த - தமிழர்களை நசுக்க வகுக்கப்படும் ஒரு திட்டத்தின் அம்சமே.

திரு. மகாதந்திலவின் நியமனம் வட மாகாணப் பாடசாலைகளில் சிங்களம் புகுத்தப்பட ஒரு முன்னேடி நடவடிக்கையாகவும் அமைந்திருக்கிறது என எச்சரிக்க விரும்புகிறேம்.

---

## ஏமாளிகளின் ஏமாற்றமா ?

அல்லது

### துரோகிகளின் மனச்சாட்சி உறுத்தலா?

37 யாழ்ப்பாண மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகள் தபால் அமைச்சர் திரு. குமாரசூரியரின் மீது, அவர் தமிழ்மக்களின் பிரச்சினைகளை, குறிப்பாக பட்டதாரிகள் நியமனம், பல்கலைக் கழக புகுமுக பரீட்சை மோசடி, ஆகியவற்றைஎதிர்க்கத் தவறியதால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனவாம்.

(ஆங்கில தினசரி 10-12—70)

---

## ''மதியாதார் முற்றம் மிதியாதே''

அரசியல் விவகார அமைச்சரின் நிதி ஒதுக்கீடு விஷயம் ஆராயப்பட்டபோது, தற்போது அமுலிலுள்ள அரசமைப்பின் கீழ் புதிய அரசமைப்புச் சட்டத்தைத் தயாரிக்க அதிகாரம் இருப்பதால் இந்த அமைச்சுக்கு நிதி ஒதுக்கத்தேவையில்லை என்று சமஷ்டிக் கட்சித் தலைவர் திரு. சா. ஜே. வே.செல்வநாயகம் குறிப்பிட்டார்.

டாக்டர் கொல்வின் ஆர் த சில்வா பதிலளிக்கையில், இந்த விஷயத்தை சமஷ்டிக் கட்சியும் அதன் தலைவரும் அரசியல் அமைப்பு நிர்ணய சபையில் பங்கு கொள்ளும்படி விடுக்கப் பட்ட அழைப்பை ஏற்கமுன் யோசித்திருக்கவேண்டும்என்று குறிப்பிட்டார்.

(டெய்லி நியூஸ் 10—12—70)

---

## அபாய அறிவிப்பு !

மாத்தளையில் அண்மையில் நடந்தேறிய அகில இலங்கை பௌத்த காங்கிரசின் வருடாந்த மகாநாட்டில் நிறைவேறிய மூன்று தீர்மானங்கள் பின்வருமாறு:-

(1) பல்வேறு சமூகத்திற்குமிடையில் ஐக்கியத்தையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்காக, உத்தியோக மொழியான சிங்களம் எல்லாப்பிரஜைகளுக்கும் கட்டாயமாகப் போதிக்கப்படுவதற்கும், தனியார் துறையினர் தமது கருமங்களை உத்தியோக மொழியில் நடத்துவதற்கும் சட்ட ஒழுங்கு செய்யப்படவேண்டும்.

(2) உயர் கல்விக்கு, குறிப்பாக விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் துறைகளுக்கு, மாணவரை அனுமதிப்பதிலும், அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் துறைகளில் தொழில் வாய்ப்புக்களிலும், இலங்கையின் சனத்தொகையுள் பௌத்தர்களின் தொகைக்கான விகிதாசாரத்திற்கமைய இடங்கள் ஒதுக்கப்படவேண்டியிருப்பினும், இது நடைமுறையில் இல்லாததால் இதனை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(3) புராதன பௌத்த சின்னங்களைப் பாதுகாப்பதற்காக அவற்றைக்கு அண்மையில் பௌத்த குடியேற்றத் திட்டங்களை உருவாக்கியும் அவ்வப்பகுதிகளில் பௌத்தரல்லாதோர் குடியேறுவதைச் சட்ட விரோதமாக்கவும் வேண்டும்.

[குறிப்பு:— இந்த பௌத்த காங்கிரசின் தலைவர் உயர் கல்விச் சபையின் தலைவர் டாக்டர் மலலசேகரா என்பதும், இக்காங்கிரஸ் தனது முந்தியஆண்டு மாநாட்டைத் திருகோணமலையில் நடத்திய போது பௌத்த காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு தமிழரசுப் பிரமுகர் உட்பட்ட குழுவால் வரவேற்பு அளிக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

[ஆசிரியர்]

---

## ஞானப்பிரகாசர் - தாவீதடிகள் ''அகராதி''

### இஃதோர் துப்பறியும் நாவல் விதமாக ஆக்கப்பெற்றது!

(ஆக்க உதவிக் குழு)

கலாநிதி தவத்திரு. க. சி. தாவீதடிகள் ''சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதி'' ஒன்றினை யாத்து வருகின்றனர் என்பது இவ்வுலகம் இப்பொழுது அறிந்ததொன்றே. இந்நூலின் அடிப்படை இங்ஙனம் இயம்பப் பெறும்:

ஒரு கை, உள்ளத்தில், நெருங்கியது. ஆனல் விரிவதனுல், விரியும் விரல்கள் வேறுபாடும், பிரிவுகளும் பெறுகின்றன. மொழிக்குடும்பமும் அங்ஙனமே. எவ்வளவுக்கு மொழிக்குடும்பத்தில் தொல்நிலைமையை எம் ஆராய்ச்சியின் பயனுகப் பெறுகின்றேமோ அவ்வளவுக்குஇப்போது பிரிந்திருக்கும் கிளைமொழிகள் ஒன்று சேர்க்கப் பட்டதாய் முன் இருந்தமை புலனுகும். இங்ஙனமே ஒவ்வொரு மொழிக் குடும்பமும். ஊராலியம்(42) 'சுமேரியம்', தொல் திராவிடம் II (19 மொழிகள்), இந்து-ஐரோப்பியம்(45) செமித்தியம்(15). இதை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

நல்லூர்சுவாமி ஞானப்பிரகாசரும், தும்பளைக் கலாநிதியாருஞ் சாற்றுவது இன்னுங் கூடிய தொன்றே. ஞானப்பிரகாசர்:—

''இவ்வைந்து மொழிக் கும்டுபங்களே விரல்களாகும். இவற்றின் கைகி. மு. 6000 — 3000 ஆண்டுகளில் ஊரல் மலை தொடங்கி தென் இந்தியா, ஈழமீருகப் பரவத் தொடங்கியதான தொல் திராவிடம்1.''

தாவீதடிகள்:-

''இவ்வைந்தில் முதல் மூன்றும் நிச்சயமாக இத் தாயாரின் புதல்விகளே. முகத்தைப் பார்த்தாலே தெரியும். நடையும் அங்ஙனமே. ஆனல், கடைசி இரண்டும் சில விடங்களில் பெற்ற தாயின் குணங்களைப் பூண்டவையாயினும், பல்வேறு இடங்களில் மிக வேறுபட்டவையாய்த் தற்போது காட்சியளிக்கின்றன. வம்பனுக்குப் பிறந்தவையோ என நாம் ஐயுற இடமுண்டு. செமித்தியமும், இந்து ஐரோப்பியமும், ஒருங்கே 60 மொழிகள். பகலத்தின் மூன்றில் இரண்டை நிரப்பியவை. இவை எங்ஙனம் ''தொல்திராவிடம் முதல்''எனும் தொல் மொழியுடன் தொடர்பு பூண்டவை? இரத்த உறவோ? பின்னிட்டகளவுப் பொருளோ? Consanguinity?Affinity?Loan words?

இதைக் குறித்தே ஆராய்ச்சி. இதைப்பற்றியுந்தான் இத்துப்பறியும் நாவல் விதமாக இயற்றப்படும் அகராதி. அனைவரும் வாரீர். ஒருங்குடன் சென்று இதை ஆராய்வோம்,'' என இனிய குரலில் மிகப் பரிவுடன் இவர் எம்மை அழைக்கின்றனர். யாமும் இவரின் அழைப்பைச் செவிமடுத்துப் போவோமன்றே? ''Consanguinity? Affinity?Loan words?'' என்பதை இவருடன் சென்று நிச்சயித்து அறிவோம் எது சரியென்று.

பெரும்பாலானவர்களுக்குப் புரியாத, சில பண்டிதர்க்குப் பிடிக்காத இம் முயற்சிக்கு இந்நூலின் அருமையுணர்ந்தவர்களாகிய யாம் முன்வந்து உதவியாற்றுகின்றனம். இந்நூலை அச்சேற்றுவதிலுள்ள சிரமத்தைத் தவிர்ப்பதற்கு நூலை முற்பணங்கட்டிப் பெற்றுக் கொள்வதே பொருத்தமானது. ஆக முற்பணமாக ரூபா 10/-ஐ தந்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேம். வசதியின்படி சீருய்வுகளை அடுத்த இதழ்களில் படித்து இன்புறுங்கள்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி
நிர்வாகி
''விடுதலை''
10, பென்றீவ் தோட்டம்,
கொழும்பு—3.

---

## இவர்கள் திருந்தட்டும் !

ஆடி வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட செத்தல்களான ஆ! தியாகராசா, அருளம்பல(ம்), ஆனந்த சங்க(ரி)ஆகிய காங்கிரஸ் மும் மூர்த்திகள் இதுவரை சாதித்தது தமிழ் காங்கிரசையே இல்லாமல் செய்தது! பேசியது சிங்கள சோஷலிசம்!! செய்ய மிவுகம் ஆசைப் படுவதோ அவர்கள் இரண்டறக் கலக்க ஒரு கட்சியைத் தேடிப் பிடிப்பதே!!! அவர்கள் தாங்கள் தமிழர்கள் அல்ல என்பதை நிருபிக்க மிகவும் ஆசைப்படுகின்றனர். அதனுல் சிங்களக் கட்சியை நாடுகின்றனர். தமக்கென ஒரு ஸ்திரமான நிலையும் இல்லாதவர்களான படியால் ஆடி வெள்ளத்தில் அடித்து வரப்பட்டனர். அதே வெள்ளம் வடிந்து விட்டபடியால் வருகின்ற வாடைக்காற்றுடன் பறந்து விடத் துடிக்கின்றனர் அதன் பலன்தான் அண்மையில் வடக்குக்கு விஜயம் செய்த வர்த்தக அமைச்சர் திரு. இலங்கரத்தினவிடம் ஞானேபதேசம் பெற்றனர். அவர் யோசனைப்படி இம் மும் மூர்த்திகள் தமிழ்க் காங்கிரஸ் என்ற பெயரை விடுத்து சிங்கள — தெமள காங்கிரஸ் என்றே அல்லது சோஷலிஸ சின்டிக்கேட் என்றே பெயர் வைத்துக் கொண்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவர்களின் இன்றைய முற்போக்குவாதம் தேர்தலுக்கு முன் வெளியாகியிருந்தால் வாக்காளர்களும் வாழ்த்தி விட்டிருப்பார்கள் - இவர்கள் கட்டுப்பணமும் அறுதியாகியிருக்கும். ஆனல் இன்று தமிழ் மக்களின் மொழியுரிமை தொழிலுரிமை, தென்னிந்திய தமிழ்ப் பத்திரிகைகள், தமிழ்ப் படங்கள் மறுக்கப்பட்டு - தமிழ் மாணவரின் உயர்தரக் கல்வி மறுக்கப்பட மாட்டாதென்ற அமைச்சர் குமாரசூரியரின் வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்ட பின்னரும் ஆள்வோருக்கு ஆலவட்டம் வீசி ஆரவாரிக்கும் இவர்கள் தமிழ் மக்களின் பொறுமையைச் சோதிக்கிறுர்களா அல்லதும் ஈழத் தமிழ் மக்கள் தான் 'குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டில் அடைத்து' விட்டார்களா என்று தோன்றும் வகையில் தமது பிறப்பால் அமைந்த குணங்களை வெளிப்படுத்துகிறுர்களா என்பதை நம் ஈழத் தமிழர்கள் விரைவில் நிச்சயிக்க வேண்டும். இவர்களும் தமது கோமாளித்தனங்களால் தமக்கும் தமது பிற்சந்ததியினருக்கும் அழியாத வடுவை தேடிக்கொள்ளாமலும் ஈழத் தமிழர்களின் பொறுமையை மேலும் சோதிக்காமலும் தவிர்த்துக் கொள்ளட்டும்.

---

## ஆள நினைப்பதில் என்ன குறை ?

விடுதலை

முரசு : 5 | 15–1–71 | முழக்கம் 75

''என்று தணியும் இந்த சுதந்திரதாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்''

# கொள்கையைக் காப்பாற்றுங்கள்!

தமிழரசுக்கட்சித் தலைவர்களினால் கபடத்தனமாகத் திணிக்கப்படவிருந்த மும்மொழித்திட்டத்தை, தமிழரசுக் கட்சியின் பொதுக்காரியசபை சென்ற ஒக்டோபர் மாசத்தில் அடியோடு நிராகரித்த பொழுதும் கூட-அக்கட்சியின் தலைவர்கள் மீண்டும் இத்திட்டத்தைப் புகுத்தி கட்சிக்கும், இனத்திற்கும் துரோகமிழைப்பார்களென்பது நாம் எதிர்பார்க்காததொன்றல்ல!

தமிழரசுக்கட்சித் தலைவர்கள் செய்யக்கூடிய இச்சதியை – துரோகத்தையிட்டு நாம் எமது 15–10–70 திகதி இதழில் தெளிவாக ஒன்றுக்குப் பல முறை குறிப்பிட்டிருந்தோம். எனினும் கட்சி உறுப்பினர்களின் தெளிவான-ஆணித்தரமான முடிவைத் தலைவர்கள் இவ்வளவு விரைவில்-அப்பட்டமாக மீறுவார்களென நாம் எதிர்பார்க்கவில்லை என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

பொதுக்காரியசபை முடிவு எடுத்து ஒரு மாதம் கூட ஆகுமுன், கட்சியின் துணைத்தலைவருள் ஒருவரான பண்டிதர் இரத்தினம் பொதுக்காரியசபையின் தீர்மானத்துக்கு விரோதமாகப் பாராளுமன்றத்திலே பேசினார்.

அவரை அடுத்து இப்பொழுது தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர்களுள் ஒருவரும், பல ஆண்டுகள் கட்சியின் செயலாளராக இருந்தவருமான டாக்டர் நாகநாதன் தமது கட்சியின் பொதுக் காரிய சபையினருக்குப் பகிரங்க சவால் விடுத்திருக்கிறார்.

People's Will என்னும் கட்சியின் பிரசார ஆங்கிலப் பத்திரிகையின் ஜனவரி இதழில் டாக்டர் நாகநாதன் எழுதியுள்ள ஓர் கட்டுரையில் தேசிய ஒற்றுமைக்கும், ஸ்திரத்திற்கும் குழந்தைகள் இரு தேசிய மொழிகளையும் அறிந்திருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

தனது கருத்தின்படி ஒரு குழந்தையின் ஆரம்பக் கல்வி தாய்மொழியில் தொடங்கப்பட வேண்டும் என்றும், மூன்றாம் வகுப்பிலிருந்து தமிழ்க் குழந்தைகள் சிங்களமும், சிங்களக் குழந்தைகள் தமிழும் கற்க வேண்டும் என்றும் 5ம் வகுப்பிலிருந்து எல்லாக் குழந்தைகளும் கட்டாயமாக ஆங்கிலம் கற்க வேண்டும் என்றும் டாடர் நாகநாதன் கூறியுள்ளார்.

இவர்கள் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்று நம்பி நாம் ஏமாறவில்லை.

முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம், காவலூர் நா.உ. திரு.வ. நவரத்தினம் ஆகியோர்கள் கட்சியின் கொள்கை வழி நின்று கட்சியின் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுகினார்கள். பாராளுமன்ற சகபாடிகளுடன் சேர்ந்து இனத்துரோகமும் கட்சித்துரோகமும் செய்யவில்லை. எனவே சகல வல்லமை மிக்க கட்சி நா. உறுப்பினர்களினால் வெளியேற்றப்பட்டார்கள். இப்பொழுதோ நிலைமை தலைகீழ்! எனவே இப்பொழுது கட்சிக் கட்டுப்பாட்டை மீறுபவர்கள் தொடர்ந்தும் கட்சி முடிவுகளை மீறிக்கொண்டே கட்சித் தலைவர்களாகத்தான் பவனி வருவார்கள்!

இந்நிலையில் கட்சி உறுப்பினரின் நிலை என்ன? அவர்களுக்குப் புத்தி சொல்ல நாம் வரவில்லை. ஆயினும் மும்மொழித் திட்டத்தை நிராகரிப்பது என அவர்கள் செய்த முடிவை எவரும் நிராகரிக்காமலிருக்கப் பார்த்துக்கொள்வது அவர்கள் கடமை–இனத்தின் அழிவைத் தடுப்பதற்காக.

நம்பிய தமிழ் மக்களை நட்டாற்றிலே கை விட்ட துரோகிகளை இன்றும் தலைவர்களாகப் பவனிவர அவர்களுக்கு வேண்டிய சக்தியைக்கொடுத்தவர்கள் அவர்கள்தான்! எனவே குறைந்த பட்சம் இந்தத் தலைவர்கள் சதித்திட்டம் வகுத்துக் கட்சியின் முடிவையும் மீறி மும்மொழித் திட்டத்தைத் தமிழ் மக்கள் மீது புகுத்திவிடாதிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கட்சியின் சாதாரண உறுப்பினர்களை அன்புரிமையால்–பழைய தோழமையின் பெயரால் கேட்டுக்கொள்கிறோம்.

அரசியல் அங்....

(4ம் கலத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள். இவற்றைத் திரிபு படுத்தி சிங்களமக்களுக்குச் சொல்லிக் கொடுத்து, இந்தக் காலத்தில் தாம் நடத்தும் வல்லரசு நடவடிக்கைகளுக்கு முன் மாதிரிகளும் சாட்டுக்களும் காண முயற்சிக்கிறார்களா சமசமாஜக் கட்சியினர்? இந்த முயற்சியைப் புரிந்துகொள்வதற்கு தமிழ் சோஷலிஸ வாதிகளிடம் ஆற்றல் இல்லையா? அல்லது தன்மானம் இல்லையா? தமிழ் வாலிப சமுதாயம் சுயாட்சி நிறுவிப் பதில் சொல்வார்கள்.

''மலமுனை''யில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோளை ஏற்க விரும்பவில்லை. இவ் வியாபாரிகள் அனைவரும் முஸ்லீம்கள்! இவர்களின் மறுப்பைத்தொடர்ந்து இரவோடு இரவாக இறைச்சிக்கடைகள் அனைத்துக்கும் மலம் அடிக்கப்பட்டது. இறைச்சி வியாபாரிகளின் வியாபாரம் அடியோடு படுத்துவிட்டது. பௌத்த தர்மம் 'மலமுனை'யில் பரப்பப்படும் ஆக்குரோஷத்தினால் மாத்தளை முஸ்லீம் வியாபாரிகள் பாதிக்கப் பட்டனர்.

## விடுதலையின் செய்தி பலனளித்தது!

எமது 1–12–70ம் நாள் இதழில் கப்பற்றுறை திணைக்களத்தில் 55 வயதிற்கு மேற்பட்ட தகுதிபெற்ற 5தமிழ் ஊழியர்களை வகுப்புவாத அடிப்படையில் இளைப்பாற்றுவதற்கு கப்பற்றுறை அமைச்சு நடவடிக்கை எடுப்பது பற்றி ஒரு செய்தி வெளியிட்டிருந்தோம்.

எமது செய்தி பலனளித்துள்ளது. குறிப்பிட்ட ஐந்து தமிழரின் சேவை தற்போதைக்கு அத்தியாவசிய மென்றதன் பேரில் அமைச்சு அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தியுள்ளது. மகிழ்ச்சி!

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## அரசியல் அங்......

யின் பொதுக் காரிய தரிசியாக இருந்தவர். கட்சியின் வெள்ளி விழா சம்பந்தமாகச் சிங்களத்திலே ஒரு விசேஷ மலர் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் அமைச்சர் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து 1970-12ம் 21ம் திகதி வெளியாகிய டெயிலி நியூஸ் பத்திரிகையிலே பிரசுரித்திருக்கிறார்ள்க

அந்தக் கட்டுரையிலே, சமசமாஜக்கட்சி கடைப்பிடித்து வந்த சிங்கள - தமிழ் சம அந்தஸ்துக் கோரிக்கையை ஏன் கைவிட்டதென்று, சிங்களம் மாத்திரம் கொள்கையை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டிவந்ததென்று, அதன் மூலந்தான் இலங்கையின் உண்மையான ஐக்கியத்தை நிலை நாட்ட முடியுமென்ற முடிவுக்கு தாங்கள் வந்துவிட்டதாகவும், சிங்களம் மாத்திரம் என்ற இலட்சியம் சிங்கள மக்களிடையே வேரூன்றி நிலைபெற்று விட்டதென்றும், அதை இனி அகற்ற முடியாதென்றும், சமசமாஜக் கட்சியானது சிங்களத் தேசியம் என்னும் ஆற்றுப் பிரவாகத்திலே எதிர் நீச்சல் போட முடியாதென்றும், சிங்கள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமே இலங்கையின் ஐக்கியத்தை வலுப் பெறச் செய்யலாம் என்றும், தாங்கள் சிங்களவரின் வெறுப்பையும் பொருட்படுத்தாமல் சம அந்தஸ்துக்காக நின்ற பொழுது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழரசுக்கட்சியினர் தமிழை வளர்க்க விரும்பவில்லை ஆங்கிலத்தை நிலைபெறச் செய்யவே உழைத்தார்கள் என்று தங்களுக்குத் தெரிய வந்துவிட்டதென்றும், மேலேழுந்த வாரியாகப் பார்த்தால் இலங்கையிலே சிங்களவர் பெரும்பான்மையினராகவும் தமிழர் சிறுபான்மையினராகவும் தெரிந்த போதிலும், உண்மையிலே பாக்குத் தொடுவாய்க் கடலுக்கு அப்பாலுள்ள தென்னிந்தியப் பகுதியையும் சேர்த்துப் பார்கும் பொழுது தமிழர்கள் தான் பெரும்பான்மையினராகவும் சிங்களவர் சிறுபான்மையினராகவும் இருப்பதை மறுக்க முடியாதென்றும், இலங்கைச் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் சதாகாலமும் இந்த இரு இனங்களுக்குமிடையே போர் நடந்த வண்ணமே இருந்திருக்கிறதென்றும், எனவே சிறுபான்மையினராகிய சிங்களமக்கள் மனதிலே நிலவுகிற நியாயமான பயத்தைப் போக்க வேண்டியது அவசியமென்று, உலகத்தின் மற்றநாடுகளிலே சிறுபான்மை இனங்களுக்கு விசேஷ பாதுகாப்புக்களை அளித்து எப்படி தேசீய ஐக்கியத்தை நிலைநாட்டியிருக்கிறார்களோ அதே போன்று இலங்கையிலேயும் சிங்கள மக்களுக்கு விசேஷ பாதுகாப்புக்களையும் உறுதியையும் அளித்துத்தான் நாட்டின் தேசீய ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட முடியும் என்றும், இந்த முடிவுக்கு வந்தபடியால் தான் சமசமாஜக் கட்சி சிங்கள தமிழ் சம அந்தஸ்துக்கொள்கையைக் கைவிட்டதென்றும் அமைச்சர் கௌரவ லெஸ்லி குணவர்தன விளக்கி இருக்கிறார்.

இந்தக்கொள்கை விளக்கம் வெளிவந்து இன்று இருபத்தைந்து நாட்கள் ஆகின்றன. ஆயினும் சமசமாஜத்தமிழ்த் தூண்கள் எவராவது கட்சியிலிருந்து வெளியேறியதாகவோ அல்லது இந்தக் கருத்தை மறுப்பதாகவோ நாம் இன்னும் காணவில்லை. அப்படியாயின் நமது சோஷலிஸத் தமிழ் நண்பர்கள் அக்கருத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்களா? தமிழ் மக்கள் சோஷலிஸத் தலைமையைப் பின்பற்ற வேண்டுமென்று இன்னும் கேட்கிறார்களா? ஒரேயொரு இடத்திலிருந்து மாத்திரம் பதில் வந்துள்ளது. வட்டுக்கோட்டை எம். பி. திரு. தியாகராசா சோஷலிஸ அரசாங்கம் தமிழருக்கு எதிராக ஒன்றும் செய்ய வில்லை என்கிறார். ஆனால் அவர் சமசமாஜி இல்லை, ஆகையால் சோழியன் குடுமி சும்மா ஆடாது. சோஷலிஸ நண்பர்களால் பிற்போக்கு வாதிகள் என்று கேலி செய்யப்பட்ட அந்தக்காலத்து யூ. என். பி. தமிழர்கள் கூட களனி மகாநாட்டிலே யூ. என். பியும் சிங்களம் மாத்திரத்தைக் கடைப்பிடித்த பொழுது அன்று கட்சியிலிருந்து கூட்டமாக வெளியேறினார்களே, அந்தத் தன்மானங்கூட இல்லாதவர்கள் தான் இன்று தமிழர்களைத் தமக்குப் பின்னால் வரும்படி கேட்கிறார்கள் என்பதை நினைக்கும் பொழுது நோர்வே நாட்டுக் குவிஸ்லிங் கூட இவர்களிடம் பிச்சை வாங்கவேண்டும் போல் தெரிகிறது.

திரு. லெஸ்லி குணவர்தனவின் கட்டுரையை வாசித்தவுடனே அவர் வாசித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய ஆங்கிலத்திலே பதில் கொடுக்க வேண்டுமென்று தான் தமிழுரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு முதலில் தோன்றும். ஆனால் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால், அதனாலே பிரயோசனம் இல்லை என்பது விளங்கும். உண்மையாக நித்திரை செய்பவனை ஏதோ தட்டி முயற்சி செய்தால் எழுப்பலாம், ஆனால் நித்திரை செய்வது போல் பாசாங்கு செய்பவனை எவ் விதத்திலும் எழுப்ப முடியாது. நமது கடமை தமிழர்களைச் சுயாட்சிக்குத் தயார் செய்வதே யன்றி, தமிழர்களை அழிக்க முயல்பவர்களுக்குப் பதில் சொல்வதல்ல. தமிழர் சுயாட்சி ஒன்றுதான் நாம் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய பதில், அவர்களுக்கும் விளங்கக்கூடிய பதில். இலங்கையின் ஐக்கியத்தையும் ஒற்றுமைப்பாட்டையும் நிலை நாட்டுவதற்காக சிங்களவரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் பயத்தை நீக்கவேண்டுமாம், நாம் நமது அழிவைத் தவிர்க்க வேண்டுமானால் நாட்டைப் பிரித்துத் தமிழர்களின் அபிலாஷங்களைப் பூர்த்தி செய்வோம். சிங்கள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்தே நாட்டின் ஒற்றுமைப் பாட்டை நிலை நாட்ட முடியும் என்று சொல்லும் பொழுது கட்டுரையாளர் மிகவும் சூக்குமமான சாமர்த்தியமான சொற்களைப் பாவித்திருக்கிறார். அதற்குப் பொருள் என்னவென்றால், தலையிடி கொடுக்கும் தமிழரின் மொழியையும் மதத்தையும் மாற்றி சிங்கள இனத்தோடு இரண்டறக் கலக்கச் செய்து ஒரே இனம் ஒரே மதம் என்ற நிலைமையை உருவாக்கி விட்டால் இலங்கையின் ஐக்கியம் திண்ணம் என்பதே அதன் பொருள். இந்த நூற்றாண்டிலே உலகத்தில் கொடுங்கோன்மை செலுத்திய ஆட்சியாளரெல்லாம் ஆரம்பத்தில் ''சோஷலிஸம்'' பேசித்தான் பதவிக்கு வந்து ஆளும் அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் என்பதைத் தமிழராகிய நாம் மறக்க முடியாது. ஹிற்லர் கூடத்தன்னை National தேசிய சோஷலிஸ்ற்வாதி என்று சொல்லித்தான் ஆட்சி பீடத்தில் ஏறினான். ஏறியபின் லட்சோப லட்சம் யூதர்களை உயிரோடு எரித்துச் சாம்பலாக்கினான். சமசமாஜக் கட்சித்தலைவர்களிற் பலர் சரித்திரம் படித்த மேதைகள். அவர்களுக்கு உண்மையான சரித்திரம் தெரியாமல் இல்லை. ஈழத்துக்கு அடுத்த அயலில் உள்ளது தமிழை வளர்த்த தென் பாண்டி நாடு. இந்தப் பாண்டி நாட்டுடன்தான் சிங்களவர்கள் காலத்துக்குக் காலம் நட்புறவு உடன்படிக்கைகளையும், பரஸ்பர பாதுகாப்புக்காக போர் உதவி உடன்படிக்கைகளையும், செய்து கொண்டார்கள். இதிலே, இன்று லெஸ்லி குணவர்தன சொல்லுவதுபோல, சிங்களத் துவேஷமோ தமிழர் மீது பயமோ தோன்றவில்லை. சோழப் பேரரசின் எழுச்சிக் காலத்திலே சோழன் பாண்டியன் மீது படையெடுத்த பொழுதெல்லாம் இந்த உடன்படிக்கைகள் பிரகாரம் பாண்டியன் உதவிக்குச் சிங்களவன் சென்றான். பாண்டி நாட்டுத் தமிழ்ப்படைகளும் ஒன்று சேர்ந்து தோளோடு தோள்நின்று சோழப் படையை எதிர்த்துப்போராடினர். ஒன்றாகப் போர்களத்திலே மடிந்தனர். இங்கே சிங்களவர் தமிழர் என்ற துவேஷம் தெரியவில்லை. பாண்டியனும் சிங்களவனும் தோல்வியடைந்து சோழசாம்ராஜ்யம் அமைத்த பொழுது, பாண்டியனுக்கு உதவிசெய்யப்போன சிங்களவரை வஞ்சம் தீர்க்கும் முகமாக சோழன் ஈழம் மீது படையெடுத்தான். சோழ சாம்ராஜயம் மெலிவடைந்த காலத்தில் மீண்டும் தலைதூக்கிய சிங்களவர் பாண்டி நாட்டைக் கைப்பற்றி பாண்டியனைச் சிம்மாசனமேற்றி வைப்பதற்காகச் சிங்களப் படையை அனுப்பினர். இந்த நோக்கத்துடன் தான் மகா பராக்கிரமபாகுவின் காலத்தில் தண்டநாயக்கன் லங்காபுரி என்னும் சேனாதிபதியின் தலைமையில் சிங்களப்படை அனுப்பி வைக்கப் பட்டது. 2ம் இராஜாதிராஜ சோழன் ஆணைப்படி திருச்சிற்றம் பலமுடையான் பெருமாணம்பி என்றும் மூத்த பல்லவராயர் என்றும் அழைக்கப்படும் சோழ சேனாபதி சிங்களப் படையை வெற்றி கண்டு தண்டநாயக்கன் லங்காபுரி முதலிய ஏனைய தளபதிகளின் தலைகளைக் கொய்து மதுரை மாநகரின் மதில் வாயில்களில் தொங்கவிட்டான். இதற்குப் பதிலாக மீண்டும் படையெடுக்கும் நோக்கத்துடன் மகாபராக்கிரமபாகு ஊர்காவற்றுறை, புலைச்சேரி, மாதோட்டம், வலிகாமம், மட்டுவில் முதலிய இடங்களில் தனது கப்பற்படையையும் மற்றும் படைகளையும் திரட்டினான். இதை அறிந்த சோழன் இலங்கைக்குப்படை அனுப்பினான். பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பன் அல்லது அண்ணன் பல்லவராயன் என்னும் சேனாதிபதி தலைமையில் மாதோட்டத்தில் வந்திறங்கிய சோழப்படை சிங்களப்படைகளையெல்லாம் அழித்து சோழன் கொடியை நாட்டி விட்டுச் சென்றது. இப்படி எத்தனை எத்தனையோ சரித்திர சம்பவங்கள் பராந்தகன், விஜயாலய சோழன், மகா இராசராசன், இராசேந்திரன், 2ம் இராசராசன், 2ம் இராசேந்திரன், 1ம் குலோத்துங்கன், 2ம் இராசாதிராசன், 3ம் குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர் காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன. இப்படியான வரலாற்றுக் காலத்திலெல்லாம் பாண்டி நாட்டுத் தமிழரும் ஈழத்துச் சிங்களவரும் கைகோர்த்து நட்புறவு கொண்டு ஒருவருக் கொருவர் உயிர் கொடுத்து உதவியிருக்கின்றனர். பகைவன் சோழனே யன்றி தமிழன் அல்ல. இவையெல்லாம் நடந்து இப்பொழுது 800, 1000 வருஷங்களாகி விட்டன. இவையெல்லாம் அக்காலத்து வல்லரசு

(1ம் கலம் பார்க்கவும்)

இப்பத்திரிகை 10, பென்றீவ் தோட்டம், கொழும்பு 3ல் வசிக்கும் க.கு. ஆடியபாதன் அவர்களால், விடுதலை அச்சுச் சாதனங்களுடன் கொழும்பு-13 விவேகானந்தர் மேட்டிஉள்ள இரஞ்சனா அச்சகத்தில் 15, ஜனவரி 1971 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.